தின் தலைமை இடமாவதற்குச் சிறந்த இடமாக இருக்கும். தேவையான தண்ணீரை வைகை ஆற்றிலிருந்து எடுக்கலாம். சிவகங்கைக்கும் மாநு மதுரைக்கும் தொலைவு 10 மைல் என்பதால், புதிய தலைமை இடமாக இரண்டு நகரங்களும் காலப்போக்கில் பரந்த நகரமாக மனப்பாங்கு பெறும். 7,632 சதுர கிலோ மீட்டர் பரப்பும் 17.48 லட்சம் மக்களைக் கொண்டதாகவும் 21 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டதாகவும் அமையும். இராமநாதபுரம் நகரம் எந்த முக்கியத்துவமும் இல்லாத ஒன்று. நான் சொல்லவில்லை. பரிந் துரைதான் அது. மேலும் ஜமீன் ஒழிப்பிற்குப் பின்னுல் அந்தப் பகுதியில் எந்தச் சிறப்பும் இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைப் போல புகழ்பெற்ற புண்ணிய ஸ்தலம் என்பதால் இராமேஸ்வரம் என்று பெயரிடுவது பொருத்த முடையது. இராமநாதபுரம் என்று பெயர் வைக்கக் கூடாது என்று சிலரும் சிவகங்கை மகாராஜா இருந்த காரணத்தால் அந்த வரலாற்றுச் சிறப்பின் அடிப் படையில் இராமநாதபுரம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று சிலரும் இப்படி இந்தக் கோரிக்கை வளர்ந்து அரசியல் கட்சிகளிடையே ஏற்படுகிற கோரிக்கையாக உருப்பெற்றுவிடக்கூடாது என்ற அச்சம் அரசிற்கு இருக் கிறது. ஆகவே இது குறித்து முடிவு எடுப்பதற்கு முன்பு அங்குள்ள மக்களின் கருத்துக்களை, அரசியல் கட்சிகளின் கருத்துக்களை, அந்த ஊரிலுள்ள பெரியவர் களின் கருத்துக்களை அறிய வேண்டியிருக்கிறது. இது உணர்வு பூர்வமான பிரச்சினை என்பதனுல் சொல்கிறேன், அவற்றை அறிந்து தெரிந்ததற்குப் பிறகு, பெயர் வைப்பதில் அரசு முடிவு செய்யும். அவசரப்பட்டு எங்களை இதில் இறங்கி விடுவதற்கு திரு. வீராசாமி அவர்கள் தூண்டக்கூடாது.

House Rent Allowance and City Compensatory Allowance.

* 176 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is fact that Therkutheru village comes within the Madurai City limits for the purposes of House Rent Allowance and City Compensatory Allowance; and

(*b*) if so, the reasons for not making payment of these allowances to the Government school teachers and Government employees residing in that village?

வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவை வழங்கப் பெறத் தகுதி உள்ளதாகும் வகையில், தெற்குத் தெரு கிராமம், மதுரை மாநகர எல்லைக்குள் வருகின்றது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அக்கிராமத்தில் வசிக்கின்ற அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் மேற்படி படிகள் வழங்கப் படாதிருப்பதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) இல்லை. மதுரை மாநகரிலும் மதுரை மாநகர எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்துக்குள் உள்ள பகுதிகளிலும் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப் படியும் நகர ஈட்டுப் படியும் வழங்கப்படுகின்றன. தெற்குத் தெரு கிராமம், மதுரை மாநகர எல்லையிலிருந்து 11 கிலோ மீட்டர் தொலைவுக்குள் அமையவில்லை. ஆதலால் அக்கிராமத்தில் பணியாற்றும் அரசுப் பணியாளர்கள் மதுரை மாநகருக்குரிய வீதங்களில் வீட்டு வாடகைப்படியும் நகர ஈட்டுப் படியும் பெறுவதற்கு உரிமையுடையவர்களாக மாட்டார்கள்.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை ;

Facilities for loan to Poor People.

* 177 Q.—Thiru Ku. Ma. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether the Government are aware of the hardships encountered by the poor people in obtaining loans on pledge to meet their urgent need;

(*b*) if so, whether the Government have any proposal to make arrangements for easy availability of loans on pledge to poor people; and

(*c*) if so, the stage at which the matter now stands?

ஏழை மக்களுக்கு கடன் வசதிகள்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஏழை மக்கள் ஆபத்து அவசரத்துக்கு அடகுக் கடன் எளிதில் வாங்க முடியாத சங்கடம் ஏற்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அவர்கள் எளிதில் அடகுக் கடன் பெறுவதற்கு ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(உ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Deputy Chairman, Sir, (*a*) Yes.